புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

======================================================================

**இஸ்லாமியத் தமிழ் நாவல்களில் வருணனைகள்**

***DESCRIPTIONS IN ISLAMIC TAMIL NOVELS***

======================================================================

**ஆய்வாளர்**

***மு. அப்துல் சமது,*** *முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),* ***(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)***
*திருச்சிராப்பள்ளி - 620 020, தமிழ்நாடு.*

**நெறியாளர்**
***முனைவர் சே. நாகூர் கனி,*** *ஆய்வு நெறியாளர்,*
*இணைப்பேராசிரியர்,*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
***(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)*** *ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),*
*திருச்சிராப்பள்ளி - 620 020, தமிழ்நாடு.*

======================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

*ஒவ்வொரு இலக்கியமும் ஒரு தனித்தன்மையுடன் திகழ்கிறது. சங்ககால முதல் இன்றைய காலம் வரை பல இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. அவற்றில் முக்கியமான இடத்தைப் பெறுபவை வருணனையாகும். இலக்கியங்களை சுவையுடன் கொண்டு செல்லப் பயன்படுவது வருணனை. புதிய இலக்கியங்கள் பல உருவாகினாலும் வருணனை என்பது இன்றளவும் மாறாமல் இடம்பெறுகிறது. வருணனை இல்லாத இலக்கியம் அழகு இழந்த ஓவியம் போன்றதாகும். வருணனை இயற்கை வருணனை, செயற்கையாக அழகினை வருணிக்கும் தன்மை, ஒவ்வொரு நாவல் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. அத்தகைய வருணனைகளை இஸ்லாமியத் தமிழ் நாவல் இலக்கியங்கள் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***கலைச்சொற்கள்:*** *வருணனை, தோற்றம், அகம், புறம், இடம், இயற்கை*

***முன்னுரை***

*நாவலில் வருணனை என்பது இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. நாவல் இலக்கியம் சிறப்பான ஒன்றாக அமையப் பெற வருணனை மிக அவசியம். நாவலில் வருணனை சரியாக அமையப்பெறவில்லையெனில் அந்நாவல் சுவையுடையதாக அமையப் பெறாது. படைப்பாளன் தான் கூற நினைக்கும் கருத்தினை வருணனையோடு எடுத்துரைக்கும் போது அக்கருத்தானது வாசகர்கள் மனதில் எளிதாகச் சென்றடையும். இவ்வாறு வருணனையைப் பயன்படுத்தி கருத்தினை வெளிப்படுத்தும் போது மரபு மாறாமல் எடுத்துரைப்பது மிக முக்கியமாகும். இஸ்லாமியத் தமிழ் நாவல் எழுத்தாளர்கள் தங்களது நாவல்களில் கையாண்டுள்ள வருணனையினைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையாகும்.*

***ஆய்வு நெறிமுறைகள்***

*இஸ்லாமிய நாவல்களை விளக்கியும், ஓப்பீட்டும் ஆய்வதால் விளக்கமுறை, ஒப்பீட்டு முறைத்திறனாய்வாகவும், பிற உத்திகளையும் பொருத்திப் பார்த்து ஆராய்வதால் இது படைப்பு வழித்திறனாய்வாகவும், கற்பனைப் பற்றிய கொள்கைகளைத் தெளிவோடு அவற்றை ஒரு படைப்பின் அழகோடு பொருத்திப் பார்த்து ஆராய்வதால் இது முருகியல் திறனாய்வாகும்.*

***வருணனை***

*வருணனை என்பதற்கு,*

> *"**நேரில் பார்ப்பது போன்று உணர்வை ஏற்படுத்தும் பேச்சு அல்லது எழுத்து Description, Commentry" (க்ரியா, தற்காலத் தமிழ் அகராதி, ப. 900)***

*என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளக்கமளிக்கிறது.*

*படைப்பாளர்கள் தங்களது நாவல்களில் வருணனையை சிறப்பான முறையில் கையாள வேண்டும். இலக்கியத்தில் வருணனையானது,*

> ***"யாதேனும் ஒரு பொருளை அதன் பல திறப்பட்ட இயல்புகளையும் அறிவு எளிதிற் பற்றுமாறு அழகும், சுவையும் பட விவரித்துக் கூறுவதுதான் வர்ணனை. வர்ணம் என்றால் நிறம் அல்லவா? இதிலிருந்து விவரிக்கப்படும் பொருள் அழகுற்றுச் சோபிக்கும் படி வர்ணனை அமைதல் வேண்டும்" (எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள் நூற்களஞ்சியம் தொகுதி-1, ப.80)***
>
> *என்று வையாபுரிப்பிள்ளை அவர்கள் விளக்கம் அளிக்கிறார்.*

*நாவல் இலக்கியத்தின் இன்றியைமயாத ஒன்றாக வருணனைத் திகழ்கிறது. வருணனையின் முக்கியத்துவத்தை,*

> ***"வருணனைகள் இலக்கியங்களுக்குச் சிறப்புச் செய்கின்றன. அந்த வகையில் இலக்கியத்தின் சுவைக்கு ஊன்று கோலாக அமைவது வருணனையாகும்.***

***வருணனை இல்லாத இலக்கியமானது சுவையற்ற உணவினைப் போன்றதாகும்"***

***(க. சிதம்பரம். பெரியபுராணத்தில் வருணனைகள் - ஓர் ஆய்வு, ப. 87)***

*என்று வருணனையின் முக்கியத்துவத்தை க. சிதம்பரம் அவர்கள் எடுத்துரைக்கிறார்.*

**வருணனை நடை**

*நாவல் இலக்கியத்தில் கதையின் தன்மைக்கு ஏற்ப சுருக்கமாகவும், சில இடங்களில் விரிவாகவும் வருணனை நடையானது படைப்பாளர்களால் பின்பற்றப்பட்டு எழுதப்பட்டுள்ளது. வருணனை நடையில் படைப்பாளன் தான் எடுத்துக் கொண்ட படைப்பின் பொருளையோ அல்லது செயல்பாட்டையோ சிறப்புற விளக்கி வருணனை செய்வதைக் காணமுடிகின்றது.*

***"குயில் கூவிக் கொண்டிருக்கும்***

***கோல மிகுந்த மயில் ஆடிக் கொண்டிருக்கும்***

***வாசமுடைய நற்காற்று குளிர்ந்தடிக்கும்***

***கவி மரங்கள் மிக்க உண்டு" (பாரதிதாசன், சஞ்சீவி பர்வதத்தின் சாரல், ப. 49)***

*என்பதில் வருணனை சிறப்புற இடம்பெற்றுள்ளதைப் பார்க்க முடிகின்றது. மேலும்,*

***"நாவலாசிரியரது மற்றுமொரு கூரிய கருவி வருணனைத் திறமாகும். நாவலில் வரும் வருணனைகள் ஆசிரியரின் கவித்துவ ஆற்றலைக் காட்டுவதாகவும், கதையோடு பொருந்தியதாகவும், கற்பவருக்கு விருப்பூட்டும் முறையிலும் அமைந்திருக்க வேண்டும். நிலம், பொழுது, பொருள்கள் முதலானவும், கதை மாந்தர்களும் வருணனையில் இடம்பெறுவது உண்டு"***

***(மா. இராமலிங்கம், நாவல் இலக்கியம், ப. 155)***

*இக்கூற்று நாவலுக்குரிய மொழிநடையமைப்பில் வருணனைகள் சிறப்பிடத்தைப் பெறுகின்றன என்பதை காட்டுகின்றது. மேலும், வருணனைகள்*

1. *தோற்ற வருணனை*
2. *இட வருணனை*
3. *இயற்கை வருணனை*

*என்ற மூன்று நிலைகளில் படைப்பாளர்கள் தங்களுடைய படைப்புகளில் வருணனைகளைக் கையாண்டுள்ளனர். இம்மூன்று விதமான வருணனைகளையும் இஸ்லாமிய இலக்கிய நாவல்களில் காணமுடிகிறது.*

**தோற்ற வருணனை**

*உலகிலுள்ள இலக்கியங்களில் கதைப் பொருண்மையை மையப்படுத்தி நேசம், காதல், அன்பு, மகிழ்ச்சி, பாசம், துக்கம், தோல்வி, ஏக்கம், எதிர்பார்ப்பு இவற்றை பாத்திரங்களின் வழி அறியமுகப்படுத்துவது தோற்ற வருணனையாகும்.*

*உமறுப்புலவர் தம்முடைய சீறாப்புராணத்தில் திமிஷ்கு நாட்டு மன்னன் ஹபீபுவிற்காக அவனுடைய சதைக்கட்டியைக் கொண்டு நபிகள் நாயகம் ஜம் ஜம்*

*கிணற்றுத் தண்ணீரை ஊற்றி இறைவனை இறைஞ்ச அத்தசைக்கட்டியானது பெண்ணாக மாறியது. அந்தப் பெண்ணின் அழகினை அழகாக தம் பாடல்களில் பதிவு செய்துள்ளதை,*

***“மடற்குழை கிழித்துத் தடக்குழல் குழைத்து***
***வரியளி யினைச்சிறைப் படுத்திக்***
***கடற்குளம் தேறாது அலைதரச் செய்து***
***கணைஅயில் கடைபடக் கறுவி***
***விடத்தினை அரவப் படத்திடைப் படுத்தி***
***மீனினம் பயப்படத் தாழ்த்தித்***
***திடக்கதிர் வடிவாள் எனக்கொலை பழகிச்***
***சிவந்துஅரி படர்ந்தமை விழியாள்”***

***(சீறாப்புராணம், தசைக்கட்டியைப் பெண்ணுருவமைத்த படலம். 20:1958)***

*ஹபீபுவின் உடல் தசையிலிருந்து உருவான பெண்களின் கண்களானது நீண்டு அவளது காதுகளை ஊடுருவித் தாக்குவது போல் இருந்தன. தலைமுடியானது நீண்டு காணப்பட்டது. அவளது கூந்தல் வண்டுகளைச் சிறைப்படுத்தின. கரும்கூந்தல்களின் தன்மையானது கடல்களிலும், குளங்களிலும் அலையை வற்றச் செய்து அம்பு, வேல் போன்ற கருவிகள் கோபத்தால் செயல்படாதவாறு செய்யும் வகையில் அமைந்திருந்தது. அவளுடைய சாந்தப் பார்வையினைக் கண்டு பாம்பானது தன் நஞ்சினை நீக்கும். அவளது கண்களைக் கண்டு கெண்டை மீனானது அஞ்சித் தாழ்ந்திடும். வாளை ஒப்பக் கொலைத் தொழிலைக் கற்றதாகி சிவப்பு ஏறி வரி படர்ந்த கண்களாயின, இதில் இஸ்லாமியர்களின் மரபை மீராமலும், அதே நேரத்தில் காப்பியத் தன்மைக் குன்றாமலும் பெண்ணின் அழகை உமறுப்புலவர் வருணித்துப் பாடியுள்ளார். இஸ்லாமியத் தமிழ் நாவல் எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளில் கதைமாந்தர்களின் தோற்றத்தை அழகான முறையில் வருணனை செய்துள்ளமையை காணமுடிகின்றது. தோற்ற வருணனையை அக வருணனை மற்றும் புற வருணனை என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.*

***அக வருணனை***

*அகவருணனை என்பது கதைமாந்தர்களின் ஆழ்மனதில் தோன்றும் எண்ணங்களின் வெளிப்பாடாக அமையப் பெறுவதாகும். இதனை கலித்தொகைப் பாடலில் உள்ள பாலைக்கலியில் தலைவியைப் பிரிய நினைக்கும் தலைவனை அணுகி தோழி சொல்கிறாள். நின்னைப் பிரிந்தால் தலைவி உயிர் வாழ மாட்டாள். நீ தலைவியை விட்டுப் பிரிவதனால் தலைவிக்கு ஏற்படும் துன்பங்களை உனக்குப் பலவாறாக பணிந்து கூறியும் என் உரையை நீ ஏற்காமல் காட்டு வழியைக் கடந்துச் செல்ல முற்படுகிறாய். செல்லும் பொழுது அவ்வழியிலே நீர் வற்றிய சுனையைக் காண்பாய். அங்கு இலையோடு சேர்ந்து மலர்களும் வாடிக்கிடப்பதைக் காண்பாய். நிலம் வரண்டு பொரிந்துக் கிடப்பதைக் காண்கையில்,*

***“................ ...... தகைப்பன***
***வல்லை நீ துறப்பாயேல், வகைவாடும் இவள் என***

***ஒல் ஆங்கு யாம் இரப்பவும், உணர்ந்தீயாய் ஆயினை,***

***செல்லு நீள் ஆற்றிடை சேர்ந்து எழுந்த மரம் வாட***

***புல்லுவிட்டு இறைஞ்சிய பூங்கொடி" (கலித்தொகை, பாலைக்கலி. 3:9-13)***

*ஆகிய உனக்கு அறிவைத் தரும் அப்பொழுதும் நீ தெளிவு பெறாவிடின் அவ்வழியில் நீ முன்பு சென்ற போது அழகாக இருந்த மரம் அழகு அழிந்து நிற்பதையும் கண்டு அவை உனக்கு அறிவூட்டி உன் தலைவியை நினைவுப்படுத்தும் என்று கூறுவதாக அமைந்த பாடலில் தலைவியின் நிலையை பாலை வருணனையுடன் இணைத்துக் கூறியுள்ளார் புலவர். இருகூரான்-ஜெரினா நாவலில் வருணனை நடையானது மிகவும் எதார்த்தவியல் பாங்குடன் அழகுற அமைந்துள்ளது. மனம் சொற்களின் மீதும் அது தரும் கற்பனையின் மீதும் விரிந்திருக்கும் வண்ணம் வருணனை நடை அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.*

***'தும்பைப் பூ நிறத் துப்பட்டியைத் தழையத் தழைய சுற்றியபடி ஹலீமா அந்தம்மவோடு ஒட்டியும் ஒட்டாமலும் ஃபாரின் நெக்லஸ், புடவை, முக்காடு போட்டுக்கொண்டு ஜெரினா அவர்களின் ஆடையும் ஜாடையும் மாறி இருந்தன" (இருகூரான், ஜெரினா, ப. 22)***

*என்று ஜெரினாவின் அழகினை வருணனை செய்துள்ளார் இருகூரான். படைப்பாளர் தம் மனதின் கற்பனைக்கு ஏற்ப அவரே வருணனை செய்வதாகும்.*

***"ஏழை எழுதிய தரித்திரத்தின் சரித்திரம், வசதியின் மினுமினுப்பாகப் பூசித் திருத்தப்பட்டிருந்தது" (இருகூரான், ஜெரினா, ப. 22)***

*என்பதில் மிகவும் திருத்தமுற அமைந்த வருணனையைக் காணமுடிவதுடன், ஏழையென்னும் தரித்திரத்தை மினுமினுப்பாக்கியது வசதியென்னும் சரித்திரம் என்பவை படிப்பதற்கு இனிமையாக அமைந்த வருணனை நடையாகும். அர்ஷியாவின் - ஏழரைப் பங்காளி வகையறா நாவலில் பெண்ணினம் தாங்கி நிற்கும் அமைதியான அழகினைச் சிறப்புற வருணனைப்படுத்தியுள்ளார் அர்ஷியா. இறைவன் படைப்பினில் அனைத்து உயிரினங்களும் அழகுற அமைந்திருந்தாலும் பெண்ணிய மாந்தர்கள் அழகுற அமைந்ததைக் கவினுற வருணனை செய்துள்ளதை,*

***"தோட்டத்துல சுத்தித்திரியுற பட்டாம் பூச்சி அவ அங்கன நின்னான்னா, பூ தான் இருக்கோன்று மூஞ்சி மேல ஒக்காந்து இளைப்பாறாமல் போகாது. அவ ஆடாம அசையாம நின்னுட்டான்னா, தேன் எடுக்கிற உறிஞ்சாங்குழலால துளை போட ஆரம்பிச்சுடும்" (அர்ஷியா, ஏழரைப் பங்காளி வகையறா, ப. 119)***

*என்பது அகமன வருணனை நடையில் கூறியிருப்பது மிகவும் சிறப்புக்குரியதாகும்.*

*இஸ்லாமியத் தமிழ் நாவல் எழுத்தாளர்கள் தங்களது நாவல்களில் சிறப்பான முறையில் அகநிலை வருணனைகளைப் பயன்படுத்தியுள்ளமையை அறியமுடிகிறது.*

***புற வருணனை***

*ஆயுள் தண்டனை நாவலில் ஹபீபா என்னும் கதைமாந்தரைப் பற்றி ஜே.எம். சாலி சிறப்புற வருணனைச் செய்துள்ளதை,*

***“அவர்களைவிட இவள் தான் அழகி. அறிவாளிப் பெண் என்று பாராட்டை அள்ளிப் பொழிந்துவிட்டு திருமணப் படலத்தில் கொண்டு வந்து நிறுத்துவார்கள். நீ கிளியாட்டம் இருக்கேடி, எவன் கொத்திகிட்டுப் போகப் போறானோ? வரப் போறவன் குடுத்து வைச்ச அதிர்ஷ்டசாலியாகத்தான் இருப்பான்” (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப. 3)***

*என்று ஹபீபாவை வருணிப்பதன் மூலம் அவளுடைய குணநலன் மற்றும் பண்பு நலன்களை சிறப்பாக வெளிக்காட்டியுள்ளார். ஒரு பாத்திரப்படைப்பு மற்றொரு பாத்திரத்தை வருணிப்பதாய் அமைகிறது. ஜாகீர் ராஜாவின் - மீன்குகைவாசிகள் நாவலில் பெண்ணியத்தின் அழகினை அழகுற வர்ணனை நடையில் படைத்துக்காட்டியுள்ளார் ஜாகீர் ராஜா. இயல்பான அழகுடைய பெண்களின் இயற்கைத்தன்மையை வருணனை நடையில் காணுமிடத்து மிகை எதார்த்தவியலாக அமைந்துள்ளது.*

***“ஆமினாவின் சிகை இத்தனை அலங்கோலமாய் இருந்ததில்லை. கோணல் வகிடுக்காரி என்றும் ஆமினாவுக்கு ஒரு பட்டப்பெயர் உண்டு. பத்து வயது வரை கோரை முடியாய் இருந்தது. அவள் பருவமடைந்தப் பிறகு நெளிநெளியாய் சுருண்ட கேசமானது. மாற்றுவதற்கு அவளொன்றும் பிரயத்தனப்படவில்லை. தானாகச் சுருண்டது. தெருவில் சுருள் கேசத்துக்கு மவுசு அதிகம். எவருக்கேனும் தான் அது வாய்க்கிறது. எல்லோர்க்கும் அது வாய்ப்பதில்லை” (கீரனூர் ஜாகீர் ராஜா, மீன்குகைவாசிகள், ப. 39)***

*ஜாகீர் ராஜாவின் வருணனையானது புறநிலை நோக்கிலான எதார்த்தமான போக்குகளைச் சித்தரிப்பதாகவும், அவை ரசிப்பதற்குரியதாகவும், கதையின் போக்கிற்கு உறுதுணையாகவும் இடம்பெற்றுள்ளது. இருகூரான் தன்னுடைய ஜெரினா நாவலில் வருணனை நடையினை எளிமையானதாகவும் தெளிவுமிக்கதாகவும் பயன்படுத்தியுள்ளார். பெண்களை அதிகளவில் வருணனை செய்து பழக்கப்பட்ட கதையாசிரியர்களுக்கு மத்தியில் இருகூரான் ஒரு ஆணின் மீதான வருணனையை அழகுற எழுதியுள்ளார்.*

***“மார்புவரை தொங்கி ஆடிய தாடி, கழுத்தும் பிடரியும் தெரியாத தலைமுடி, கால் வரை வழிய வழியப் போட்டிருந்த பச்சை சட்டை. தாடிக்கும் கீழாகத் தொங்கிய பல நிறக்கல் மாலை. கையில் ஒரு கற்றை மயிலிறகு. கண்களில் சுர்மா. கையில் ஒரு தப்ஸ்.***

***யாரோ ஒரு பக்கீர் பாவா” (இருகூரான், ஜெரினா, ப. 76)***

*என்று ஒரு பக்கீர் பாவின் தோற்றத்தை இயல்பான நடைதனில் வருணனை செய்துள்ளார் இருகூரான். மேலும்,*

***“அவருக்குக் காது கொஞ்சம் மந்தம். ஆறரை அடிக்கும் ஒரு வெரக்கடை கூடுதல் ஒசரம். அகலமான நெஞ்சு. ஒங்கு தாங்கான ஆளு. தலை நெறைய செம்பட்டை முடி. ஆனா சுருள் சுருளா இருக்கும். நெளி நெளியான அதை அப்பப்ப கையாலே வாரிக்குவாரு. மூதாதையரை உரிச்சு வெச்சாப்ல அந்தப் பக்கத்து***

***நாசி. இருக்குன கண்ணு. குத்துற பார்வை" (எஸ். அர்ஷியா, ஏழரைப் பங்காளி வகையறா, ப. 19)***

*என்பதில் மூதாதையரை நினைவூட்டும் வகையில் அமைந்த ஐம்பது வயதான ஆண்மகனின் இயல்பான உடல் தோற்றத்தை தமது வருணனையில் வெளிப்படுத்தியுள்ளார் அர்ஷியா. வருணனை நடை என்பது அழகியல் கூறுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இயல்பான எழுத்தின் மூலம் தோற்றத்தை கற்பனை செய்து கொள்ள வருணனை நடை உதவுகின்றது.*

***இட வருணனை***

*மனிதர்களை வருணனை செய்தது போன்று இடங்களையும் சுற்றுச் சூழலையும் வருணனை செய்துள்ளனர் நாவலாசிரியர்கள்.*

***"தேன் செய்யும் மலரும் தீயும்***
***செந்தீயும் நீறாய் போகும்!***
***கான்,செய், ஊர், மலை, காடு, ஆறு***
***கடலெல்லாம் எரிவதோடு***
***எரிகின்றனர் பகலோன்!" (கல்யான்ஜி கவிதைகள், ப. 7)***

*என்ற கவிதையில் வெயிலின் தன்மையையும், வெப்ப மிகுதியினால் பூமியில் ஏற்படும் மாறுபாடுகளையும், சூரியனின் ஆற்றலையும் வருணனை செய்துள்ளார். கவிஞர். இதனைப் போன்று,*

***"சேட்டுவைக் காலம் சிதைத்திருந்தது. நரையோடிப் போய் மெலிந்து பீடிப்புகை இழுப்பில் கன்னங்கள் இரண்டு பக்கமும் ஒடுக்கு விழுந்திருந்தது. அதிகாலைப் பனியை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அடிக்கடி உடலை ஸ்...ஸ்...ஸ்... என்ற ஒசை தந்து குறிக்கிக் கொண்டான்"***

***(கீரனூர் ஜாகீர் ராஜா, மீன்குகைவாசிகள், ப. 60)***

*என்பதில் அதிகாலையில் தோன்றும் பனியைச் சேட்டுவால் தாங்கிக் கொள்ள இயலாததைக் கண்டும், அவரது உடலின் தோற்றத்தையும், காலத்தின் வெள்ளத்தில் அழகு நிலைத்து நிற்காமல் போனதுடன், வெப்பமின்மையால் இவ்வுலகில் குளிர் மட்டும் நிறைந்திருந்தால் உயிரினங்களால் வாழமுடியாது என்பதை பதிவு செய்திருக்கிறார் ஜாகீர் ராஜா. மேலும்,*

***"வாசலை திறந்த போது மேலிருந்து என்னவோ நொருங்கி விழுந்தது. நாலா பக்கமும் டார்ச் அடித்துப் பார்க்கும் போது கால்கள் நடுங்கின. கொஞ்சம் பெருச்சாளிகளும், எலிகளும் அங்குமிங்கும் ஓடின"***

***(தோப்பில் முஹம்மது மீரான், அஞ்சுவண்ணம் தெரு, ப. 15)***

*மனித வாழ்க்கையில் வயது முதிர்வு, நோய்வாய்ப்படுதல், உறவுகளின் கொடுமைகள் வாழ்க்கையின் இறுதி கட்டத்தில் நிகழக்கூடிய அவலங்களாக உள்ளன நிஜ வாழ்க்கையில் நிகழக்கூடிய செயல்பாடுகளை இயற்கையின் மீதேற்றி, வருணனை நடையில் காட்சிப்படுத்தியுள்ளார் முகம்மது மீரான்.*

***“எட்டு பத்து அறைகள் உள்ள பெரிய வீடு. வானம் தெரியும் படியான திறந்த நடுமுற்றம். ஜன்னல் கதவுகள் கழன்று விஜாகிரியில் (கீழ்) தொங்கி ஆடின. எங்கு திரும்பினாலும் சிலந்தி வலைகள். மச்சின் மீது ஏதோ உயிர்ப்பிராணிகள் நடமாடும் கலபில சப்தம்” (தோப்பில் முஹம்மது மீரான், அஞ்சுவண்ணம் தெரு, ப. 16)***

*என்பதில் பழங்கால வீட்டின் இயல்பையும், அவ்வீடுகளில் மனிதர்களுடன் சார்ந்து வாழக்கூடிய நாய், பூனை, எலிகள் ஆகியவற்றைக் கொண்டு இடத்தின் தன்மையை வருணனை செய்துள்ளார் ஆசிரியர். தெரு மற்றும் வீடுகளின் அமைப்பு அங்கு வாழக்கூடிய பூச்சியினங்கள் மேலும் பிற உயிரினங்கள் ஆகியவற்றைப் பற்றி கூறியுள்ளதுடன் தெருவின் வருணனையைக் கொண்டு ஒரு ஊரினையேச் செம்மையுறக் காட்சிப்படுத்தியுள்ளார் தோப்பில் முகம்மது மீரான். நாகூர் ரூமி அவர்கள் திராட்சைகளின் இதயம் நாவலில் காற்றோட்டம் நிறைந்த கிராமத்து வீடுகளையும், அவ்வீடுகளில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள ஊஞ்சலைப் பற்றியும் சிறப்புற வருணனை செய்துள்ளது பழங்கால வீடுகளில் வெளியில் திண்ணை, வீட்டின் நடுவில் முற்றம், கொல்லைப்புறம் ஆகியன முக்கிய இடம்பிடித்துள்ளன.*

***“மாமா வீட்டு முற்றத்தில் இரண்டு மர ஊஞ்சல்கள் எதிர் எதிர் திசைகளில் இருக்கும். ஒட்டு வீடு காற்றுப்பந்தல், ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடும்போது காற்று சுகமாக அடுக்கும்” (நாகூர் ரூமி, திராட்சைகளின் இதயம், ப. 25)***

*வீடுகளில் காற்றோட்டம் அதிகம் இருப்பின் நோய் தொற்று ஏற்படாது. சாதாரணமாக செய்யப்பட்ட பழக்கவழக்கங்களில் அறிவியல் அதிகம் இடம்பெற்றுள்ளது.*

***“தாழ்வாரத்தின் முகத்துக்கு நேரே இருந்த அறைதான் முசலியாரின் சயன அறை, கருஞ்சிவப்பிலும், ஊதாவிலும் நீளமான கோடுகள் போட்ட தடித்த காட்டன் துணி பொருத்தப்பட்ட சாய்மா நாற்காலி மரத்தால் ஆனது” (நாகூர் ரூமி, திராட்சைகளின் இதயம், ப. 60)***

*என்பதில் நாற்காலியின் வருணனை இடம்பெற்றுள்ளதுடன் தலைமுறை, தலைமுறையாக நமது பாரம்பரியத்தின் அடையாளமாக சில பழக்கவழக்கங்கள் மரபு ரீதியாகப் பின்பற்றப்பட்டுள்ளதைக் காட்டியுள்ளார். நகரத்தின் அழகினை மிகவும் சிறப்புற வெளிப்படுத்தி மும்பை நகருக்கு நம்மை அழைத்துச் செல்கிறார் நாகூர் ரூமி. இதனை ஒத்து கப்பலுக்குப் போன மச்சான் நாவலிலும் இடவருணனை அமைந்துள்ளது.*

*கப்பலுக்குப் போன மச்சான் நாவலில் மும்பை நகரத்திலுள்ள வானுயர்ந்தக் கட்டிடங்களின் தன்மையையும், கடைகளின் வாசலில் விற்பனைக்குத் தயாராக உள்ள பொருட்களையும் அங்கு கூடியிருக்கும் மக்கள் கூட்டத்தையும், வாகனங்களின் அதிகரிப்பையும், வாழ்வியல் முறைகளையும் தெளிவுபட விளக்கியுள்ளார்.*

***“கழுத்து வலிக்க நிமிர்ந்து பார்க்க வைக்கும் அந்த ஸ்டேஷனின் உயரம் மட்டுமல்ல, அந்த கம்பீரம் எல்லாம் தான். இது இந்தியாதான் என்று நினைத்த***

***போது பெருமையாகத்தான் இருந்தது" (நாகூர் ரூமி, கப்பலுக்குப் போன மச்சான், ப. 61)***

*என்று மும்பை நகர கட்டிடங்களின் அழகையும், இந்தியாவின் புகழ்மிக்கதானக் கட்டிடக் கலையின் பெருமையைப் பறைசாற்றுவதுடன் மனிதர்கள் அதிகம் வாழக்கூடிய பகுதியாகவும், வறுமையும், செல்வமும் உடைய மக்களைக் கொண்ட பகுதியாகவும் மும்பை காட்டபட்டுள்ளது. அங்கு வாழக்கூடிய மக்களின் வாழ்வியல் எதார்த்தத்தைக் காட்டக்கூடியதாக அமைந்துள்ளது.*

***இயற்கை வருணனை***

*மண்ணின் மகத்துவத்தையும் இயற்கையின் எழில் கொஞ்சும் அழகினையும் எடுத்துரைப்பதாய் இடம்பெறுவது இயற்கை பற்றிய வருணனை ஆகும். கதையாசிரியர்கள் கதையின் தன்மைக்கு ஏற்ப, கிராம நகரத்தின் அழகினைப் பற்றி வருணனை செய்யுமிடத்து, இயற்கையை வியந்துப் போற்றி வருணனை செய்யத் தொடங்குகின்றனர். இத்தகைய இயற்கை வருணனை,*

***"உயரத்தில் சூரியன் சுழன்று கொண்டிருந்தான். வழியில் வருவோர்க்கு எல்லாம் போர்வைகள் வயல்கள் இருப்பக்கமும், நடுநடுவே தோப்புகள்"*** *என்று இருகூரானும்,*

***(இருகூரான், ஜெரினா, ப. 68)***

***"ராத்திரி நேரத்து வைகை ரொம்ப அழகு நாளைக்குள் நாளைக் கழிச்சா பௌர்ணமி, அம்மாவாசியிலிருந்து வளர்ந்து வளர்ந்து ஒரு ஓரத்துல கொஞ்சமா சத்துப்புடிக்க வேண்டியிருக்குது. ரெண்டு நாள்ல முழுவட்டமா ஆயிரும் அப்பப் பார்க்க இன்னும் ரொம்ப அழகாருக்கும். சல...த்து... ஒடுற... ஆத்து தண்ணியில நிலா அலைக்கழிஞ்சு... அலைக்கழிஞ்சு... ஓடஞ்சு சேருறது.. தத்தளிக்கிறது" (அர்ஷியா, ஏழரைப் பங்காளி வகையறா, ப. 100)*** *என்று நிலாவின் அழகை ரம்மியமான முறையில் வருணனை செய்துள்ளார் அர்ஷியா.*

*கிராமங்களில் காணப்படுகின்ற ஏரி, குளங்கள், ஆறுகளின் அழகினைக் கதையின் தன்மைக்கு ஏற்ப வருணனை செய்திடுவதில் தமிழிலக்கியவாதிகள் மிகவும் சிறப்புற்று விளங்கியுள்ளனர்.*

***"சலீம் நினைத்தவுடன் குளக்கரையின் ரம்மியங்கள் எல்லாம் உஷ்ணத்தில் காணாமல் போயின. வற்றி வரண்டது குளம். நீரின்றிப் பாளம் பாளமாய் வெடித்த நீளமான நிலப்பரப்பு கோடையின் வேனில் காற்று மேனியைச் சுட்டது. கொக்கோ, நாரையோ, வேறெந்த ஜீவராசியுமோ கூட இல்லை. பருந்துகள் தாழ்வாகப் பறந்து வட்டமிட்டன" (கீரனூர் ஜாகீர் ராஜா, மீன்குகைவாசிகள், ப. 11)***

*என்பதில் குளம் பற்றிய வருணனையும், வேனில் காற்று, வறண்ட நிலத்தின் தன்மை, நீர்பரப்பு இன்றி காணப்படும் குளத்தினைப் பற்றிய வருணனையானது ஜாகீர் ராஜாவின் எழுத்தாற்றலுக்குச் சிறந்த சான்றாக அமைகிறது.*

## முடிவுரை

சங்க இலக்கியப் பாடல்களில் தலைவியை வருணிக்கவும், தலைவியின் மனநிலையை உணர்த்துவதற்கும், தலைவனை வரைந்து கொள்ள தோழி கூறும் அறிவுரைகள் தனை வருணனைகளின் வழியிலேயே புலவர்கள் தம் பாடல்களில் அழகுற எடுத்துக் கூறியுள்ளனர். அதுபோன்று கவிதை இலக்கியங்களிலும் வருணனையானது ஒரு அமைப்புடன் கூடிய அழகியலாகப் படைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமியத் தமிழ் நாவல் இலக்கியங்களில் பெண்களின் அழகு மட்டுமல்லாது, ஆண்களின் அழகினையும், தோற்றத்தினையும் எடுத்துரைத்துள்ளனர். வருணனைகளை அக வருணனை, புற வருணனை, இயற்கை வருணனை, இட வருணனை என்று வருணனைகளைப் பலவிதமாகப் பிரித்து தம் நாவல்களில் பதிவு செய்துள்ளனர். எந்நிகழ்வு மாறினாலும் இனி தொடரும் காலங்களில் வருணனை என்பது புது வடிவம் பெற்றுத்திகழும் என்பதில் எவ்வித மாற்றமுமில்லை எனலாம்.

## துணை நூற்பட்டியல்


1. சிதம்பரம் க., பெரியபுராணத்தில் வருணனைகள் - ஓர் ஆய்வு, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
2. வையாபுரிப்பிள்ளை எஸ்., இலக்கியச் சிந்தனைகள் நூற்களஞ்சியம்: தொகுதி-1, பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-108, முதற்பதிப்பு:1999.
3. பாரதிதாசன், (ஆ.), முனைவர் கமலாமுருகன். கே. இரா. (தொ.ஆ), சஞ்சீவி பர்வதத்தின் சாரல், கௌரா புத்தக மையம், ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 01, முதற்பதிப்பு - 2017
4. தோப்பில் முஹம்மது மீரான், அஞ்சுவண்ணம் தெரு, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி, முதற்பதிப்பு - 2008
5. கீரனூர் ஜாகீர் ராஜா, மீன்குகைவாசிகள், எதிர் வெளியீடு, 96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி - 642002, இரண்டாம் பதிப்பு - ஆகஸ்டு 2013
6. அர்ஷியா. எஸ், ஏழரை பங்காளி வகையறா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட., 41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600098, முதற்பதிப்பு - 2009
7. சாலி. ஜே.எம்., ஆயுள் தண்டனை, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108
8. இருகூரான், ஜெரீனா, அமானி பப்ளிகேஷன்ஸ், சி 4௸15, பூபதி நகர், கோடம்பாக்கம், சென்னை - 24, முதற் பதிப்பு - 1999
9. நாகூர் ரூமி, திராட்சைகளின் இதயம், கிழக்கு பதிப்பகம், 16, கற்பகாம்பாள் நகர், மயிலாப்பூர்;, சென்னை - 4, முதற்பதிப்பு - ஜனவரி 2005
10. நாகூர் ரூமி, கப்பலுக்குப் போன மச்சான், சந்தியா பதிப்பகம், அசோக் நகா;, சென்னை-83, முதற்பதிப்பு 2002
11. இராமலிங்கம். மா, நாவல் இலக்கியம், தமிழ் புத்தகாலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1975
12. கல்யாண்ஜி, கல்யாண்ஜி கவிதைகள், சந்தியா பதிப்பகம், எண். 77, 53வது தெரு, அசோக் நகர், சென்னை - 83, முதற்பதிப்பு 2021
13. பரிமணம் அ.மா., பாலசுப்பிரமணியன் கு.வெ., கலித்தொகை மூலமும் உரையும், நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014